தேதி.10.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

POP. No.2/2025 திருமதி.புட்டுமாதம்மா, க/பெ.சித்தன் ம.சா.1

<u>ம.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவர் சித்தன் பெயரிலுள்ள சொத்தை நான் தான் அனுபவித்து வந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து போக எனக்கு 2.47 செண்ட் மனையிடம் வாரிசு அடிப்படையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2.47 செண்ட்டின் மதிப்பு ரூ.1,25,000/-க்கு மேல் விலைபோகும் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் நான் குடியிருக்கும் மனைவீடு தான் என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எ.ம.சா.ஆ.1 மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). எனக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் சொத்து உள்ளதால் நான் இந்த POP மனுவை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. எனது கணவர் வழியாக எனக்கு மேற்படி வீடு உள்ள விவரத்தை நான் எனது மனுவிலோ, முதல் விசாரணையிலோ சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

( சாட்சிக்கு தமிழ்மொழி தெரியாது என்பதாலும், கன்னட மொழி தான் தெரியும் என்பதால் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத வழக்கறிஞர் திரு.ஆர்.கார்த்திகேயன் அவர்களால் சாட்சிக்கு மேற்சொன்ன விவரங்கள் கன்னடத்தில் கேட்கப்பட்டு சாட்சி கன்னடத்தில் சொன்ன பதிலை தமிழ் மொழியில் மொழிப்பெயர்த்து அது இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. )

(மொழிப்பெயர்ப்பாளர்)

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.